## கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க

# கரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக் குழு கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி அறிவிப்பு!



கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் 14.05.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்ற தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் அறிவித்ததற்கிணங்க கரூர் மாவட்டத்தில் உள்ள கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஆகிய தொகுதிகளில் கள ஆய்வுக்கூட்டம் கழக மருத்துவ அணி இணைச் செயலாளர் டாக்டர் ஆர்.கோகுல் மற்றும் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் இன்பா ஏ.என்.ரகு ஆகியோர் முன்னிலையில் கீழ்கண்டவாறு நடைபெறுகிறது.

| வ.எண் | நாள் | நேரம் | இடம் | தொகுதி |
|---|---|---|---|---|
| 1. | 18.05.2026 | காலை 8.00 மணி முதல் | TVR சரஸ்வதி மஹால்,கரூர் | கரூர் |
| 2. | 19.05.2026 | காலை 8.00 மணி முதல் | சிவ செல்வி திருமண மண்டபம், சின்ன தாராபுரம் | அரவக்குறிச்சி |
| 3. | 20.05.2026 | காலை 8.00 மணி முதல் | SKT மஹால், மணவாடி | கிருஷ்ணராயபுரம் |
| 4. | 21.05.2026 | காலை 8.00 மணி முதல் | அண்ணா மண்டபம், குளித்தலை | குளித்தலை |

ஆய்வின் போது கள ஆய்வுக் குழுவினர் நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து கருத்துக் கேட்க உள்ளனர். அதுசமயம் கள ஆய்வுக்குழு கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், வேட்பாளர்கள், தொகுதிக்குட்பட்ட செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் - நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, பகுதி, நகர, ஒன்றிய, பேரூர் சார்பு அணி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், வார்டு கழகச் செயலாளர்கள் BLA-2 அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**வி.செந்தில்பாலாஜி**
**செயலாளர், கரூர் மாவட்ட தி.மு.க.**

## சேலம் கிழக்கு மாவட்டம் முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

*சேலம், மே 18-*

சேலம் கிழக்கு மாவட்டம் வாழப்பாடி உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் முரா. கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம் எம்.பி., கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார். இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், தே.மலையரசன் எம்.பி., மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் டாக்டர் தருண், மனோகரன், கோபால் , சங்கர், சந்திரமோகன் , சோமசுந்தரம், ஒன்றிய செயலாளர்கள் மாணிக்கம், விஜயகுமார், ரத்தினவேல் , சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், மூர்த்தி, ராஜேந்திரன், மருதமுத்து, சிவராமன் , டாக்டர் செழியன், வரதராஜன், சித்தார்த்தன், பாலமுருகன், சாத்தப்பாடி மணி , நகர செயலாளர்கள் வேல் முருகன், பாலசுப்பிரமணியம், ராமச்சந்திரன், மற்றும் பேரூர் செயலாளர்கள் சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன .

“கலைஞர்” தமிழகம் கண்ட நான்கெழுத்து மந்திரம்! தமிழ் மக்களின் உயிர்த் துடிப்பு! இந்தியா கண்ட அரசியல் அதிசயம்! ‘உடன் பிறப்பு” என்ற ஒற்றை சொல்லால் சாதி, இனம், மதம், மொழி என்ற பேதங்களை ஒழித்த நல்லுறவு! பேச்சால், எழுத்தால், உரையாடல் வீச்சால் உள்ளங்கவர்ந்த அறிவாற்றல்! தன்னலமற்ற தலைமைப் பண்பு! 5 முறை ஆட்சிப் பொறுப்பில் இருந்த போதெல்லாம் தீட்டிய பல்வேறு திட்டங்களில் வாழுகின்ற பெருமை! மனிதநேயம் காத்திட்ட மகத்தான பண்பு! தூய்மையும் வாய்மையும் நிரம்பிய நெஞ்சுரம்! ‘வாருங்கள் எல்லோரும் மொழிப் போருக்கு சென்றிடுவோம் வந்திருக்கும் இந்திப் பேயை விரட்டி யடிப்போம்” என்று அரைக்கூவல் விடுத்த மொழி உணர்வு! தலைவன் இட்ட கட்டளையை நிறைவேற்ற தண்டவாளத்தில் தலைவைக்கத் தயங்காத வீரம்! எண்பது ஆண்டு பொதுவாழ்வின் சாதனைகளால் மறைந்த பின்னரும் வாழுகின்ற மகத்துவம்! இப்படி கலைஞர் எனும் முத்தமிழறிஞர் அவர்களின் புகழை நாளெல்லாம் சொல்லிக் கொண்டே போகலாம். வருகின்ற 03.06.2026 அன்று தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா கொண்டாடப்படவுள்ளது. அதன்படி நமது சேலம் கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட வேண்டும். அதனையொட்டி மாவட்டத்தில் உள்ள தலைவாசல், கெங்கவல்லி, ஆத்தூர், வாழப்பாடி, அயோத்தியாப்பட்டணம், ஏற்காடு, பனமரத்துப்பட்டி, சேலம், வீரபாண்டி ஆகிய ஒன்றிய கழகங்கள் சார்பாகவும், ஆத்தூர், பெத்த நாயக்கன் பாளையம், நரசிங்கபுரம், ஆகிய நகர கழகங்கள் சார்பாகவும், ஆட்டையாம் பட்டி, இளம்பிள்ளை, மல்லூர், பனமரத்துப்பட்டி, அயோத்தியாப்பட்டணம், பேளூர், வாழப்பாடி, பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாப்பூர், கீரிப்பட்டி, தம்மம்பட்டி, கெங்கவல்லி, தெடாவூர், செந்தராப்பட்டி, வீரகனூர் ஆகிய பேரூர் கழகங்கள் சார்பாகவும், ஊராட்சிகள் சார்பாகவும் என்றென்றும் நம்முடன் வாழுகின்ற தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா கோலகலமாக கொண்டாடப்பட வேண்டும். கொடியேற்றுதல், தோரணங்கள் அமைத்தல், ஏழை எளியவருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், அன்னதானம், இனிப்புகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கான சிறப்பு ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மாவட்ட கழகத்தின் ஆலோசனையுடன் சிறப்பாக செய்திட வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# இன்றைக்கும் ஸ்டாலின்தான் ஆளுகிறார்!



கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை துவங்கி, கடந்த மூன்று ஆண்டுகளாக ஒரு கோடியே முப்பத்தியோரு லட்சம் மகளிருக்கு தொடர்ந்து திராவிடமாடல் ஆட்சியின் நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி வந்தார்.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்ததால், தேர்தல் ஆணையம் இதை நிறுத்த வழி இருக்கின்ற காரணத்தால், கடந்த பிப்ரவரி மாதமே, பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான மூவாயிரம் ரூபாயை அனைவருக்கும் முன்கூட்டியே வழங்கி விட்டார்.

அத்தோடு நில்லாமல், கோடைக் கால சிறப்பு நிதியாக அனைத்து ரேஷன் கார்டு வைத்திருப்போருக்கும் ரூ. 2000த்தையும் வழங்கினார்.

அப்பொழுது அவர் தேர்தல் அறிக்கையில் கூறியபடி, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மே மாதம் முதல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை என்பது ஆயிரம் ரூபாய்க்குப் பதிலாக இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தித் தருவோம் என்றும் வாக்குறுதி அளித்திருந்தார்.

தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்திருந்தால், இன்றைக்கு ஒவ்வொரு மகளிரின் அக்கவுண்ட்டிலும் ரூபாய் இரண்டாயிரம் வரவு வைக்கப்பட்டிருக்கும்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விட்டது… ஒவ்வொரு மாதமும் 6ஆம் தேதி புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் 6 லட்சத்தி 28 ஆயிரம் மாணவ மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் தி.மு.க. ஆட்சியில் திட்டம் கொண்டு வரப்பட்டு வழங்கி வந்தார் அன்றைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.

ஆனால் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட விஜய் அவர்கள் அதை வழங்காமல் இழுத்தடிக்கவே… சட்டமன்றத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாணவர்களை காக்க வைக்காதீர்கள், உடனடியாக அந்த தொகையை தாருங்கள் என்று அழுத்தமாக வலியுறுத்தினார். நாங்கள் ஆட்சிக்கு வந்திருந்தால் அந்தத் தொகையை ரூ.1500 ஆக உயர்த்தித் தருவதாக வாக்குறுதி அளித்திருந்தோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதன் பிறகு அடுத்தநாள் அந்தப் பணத்தை மாணவ - மாணவிகளுக்கு வரவு வைத்த முதல்வர் விஜய், நேற்று ஒரு அறிக்கை கொடுத்து மகளிர் உரிமைத் தொகையை மறுசீரமைப்பு செய்ய வேண்டியுள்ளதால், மே மாத தொகையை நாள் குறிப்பிடாமல் விரைவில் கொடுப்போம் என்று பொத்தாம் பொதுவாக அறிக்கை கொடுத்து…

இதற்கான எதிர்வினை எப்படியுள்ளது… என்பதை விசாரணை செய்தும், தங்கள் ஆதரவாளர்கள் மூலம் இந்தப் பணம் வராவிட்டாலும் பரவாயில்லை என்று சொல்லி வீடியோ வெளியிட வைத்தும்… மக்கள் எதிர்ப்பு ஏதுமில்லை என்றால் இதை அப்படியே கிடப்பில் போட்டு விடலாம் என்றும் எண்ணினார் போலும்…

ஆனால், விஜய் அறிக்கை வந்த அடுத்த நிமிடமே பொங்கியெழுந்த தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இதற்கு கடும் கண்டனத்தை தெரிவித்ததோடு, நாளையே இதை வழங்க வேண்டும் என்றும் இல்லாவிட்டால் போராட்டம் வெடிக்கும் என்றும் அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து தி.மு.க.வினரும், சமூக வலைதளங்களில் தங்கள் கடுமையான எதிர்ப்பை இதற்கு தெரிவித்த நிலையில்… பொதுமக்கள் லட்சக்கணக்கானோர் வெகுண்டெழ துவங்கவே…

இன்றைக்கு தி.மு.க. அரசு கொடுத்துக் கொண்டிருந்த அந்த ஆயிரம் ரூபாயை வரவு வைத்து விட்டார் முதல்வர்.

ஆனால் அவர் மக்களுக்கு வாக்குறுதியாக அளித்திருந்த தொகையோ ரூபாய் 2500. அதை அவர் வழங்கவில்லை. இது தான் செய்தியாக வரவேண்டும். ஆயிரம் ரூபாயைக் கொடுத்து விட்டு முதல்வர் விஜய் அதிரடின்னு ஊடகங்களும், அவர் ஆதரவாளர்களும் கொக்கரிக்கின்றனர். ஸ்டாலினின் மிரட்டலுக்கு, பணிந்தார் விஜய்ன்னு தான் தலைப்பிட்டு ஒரு நல்ல ஊடகம் செய்தி வெளியிட்டிருக்க வேண்டும்.


**சௌமியன் வைத்தியநாதன்**
கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்




காரணம் ஜனநாயகத்தில், சட்டமன்றமும், நீதிமன்றமும், எதிர்க்கட்சியும், ஊடகங்களும் நான்கு தூண்கள் என்று கூறப்பட்ட நிலையில், நீதிமன்றமும், எதிர்க்கட்சியும் பொய்த்துப் போனாலும் ஊடகங்கள் ஜனநாயகத்தை தூக்கி நிறுத்தும் கடமையை நிறைவேற்ற வேண்டும்.

மக்களுக்கான குரலாகத்தான் எதிர்க்கட்சியும், ஊடகமும் செயலாற்ற வேண்டும். எதிர்க்கட்சி குரலை உயர்த்திய நிலையில், ஊடகங்களும் அதை கடைப்பிடிக்க வேண்டும். அப்படி செயலாற்றினால் தான் ஆட்சி மக்களுக்கானதாக இருக்கும். இல்லாவிட்டால் சமூக சீரழிவு தான் ஏற்படும்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், காலைச்சிற்றுண்டி, நான் முதல்வன் உள்ளிட்ட நான் கொண்டு வந்து சிறப்பாக நிறைவேற்றிய திட்டங்களை யார் ஒருவர் நிறுத்த முயன்றாலும் புரட்சி வெடிக்கும், ஆட்சி மாறும்… ஆகையால் அந்த திட்டங்கள் தொடரும் வரை இந்த ஸ்டாலின் தான் தமிழ்நாட்டை ஆட்சி செய்வான் என்று தி.மு.க. தலைவர் சொன்னது இன்று நிஜமாகியிருக்கின்றது.

இன்றைக்கும் ஸ்டாலின் தான் ஆள்கிறார்.

## தென்காசி தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர்

# டாக்டர் கலை கதிரவன் மே 20 அன்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

## மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிவிப்பு!

*தென்காசி, மே 18-*

பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தென்காசி தொகுதி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன் தென்காசி தொகுதிக்குட்பட்ட கீழப்பாவூர் மத்திய ஒன்றியத்தில் மே19க்கு பதிலாக 20.05.2026 அன்று நன்றி தெரிவிக்கிறார்.

இது குறித்து தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிவிப்பு வருமாறு:-

தென்காசி தெற்கு மாவட்டம், தென்காசி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு பெரும்பான்மையான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தென்காசி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன், அவர்கள் மே 19 அன்று நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி தேதி மாற்றப்பட்டு வருகிற 20.05.2026 அன்று கீழப்பாவூர் மத்திய ஒன்றியத்திற்குட்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள ஊர்களில் தனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்.

கீழப்பாவூர் மத்திய ஒன்றியம்


20.05.2026 புதன் கிழமை காலை 7.00 மணி

கீழப்பாவூர் மத்திய ஒன்றியப் பொறுப்பாளர் எம்.சேசுராஜன் அவர்கள் முன்னிலையில் காலை 7.00 மணிக்கு துவரங்காட்டில் தொடங்கி, இடையார்தவணை, இனாம் வெள்ளகால், இராஜபாண்டி, தாயார்தோப்பு, செம்புலிப் பட்டணம், கோவிந்தப் பேரி, வீரகேரளம்புதூர், இராஜகோபாலப்பேரி, அதிசயபுரம், இராமனூர், கலிங்கப் பட்டி, கோட்டை அண்ணா நகர் ஆகிய ஊர்களில் நன்றி தெரிவிக்கிறார்.

இவ்வாறு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தி.சு. நல்லதம்பி
### மே 18 (2007)



**கழகம் தோன்றிய காலத்திலிருந்து கழக உறுப்பினர்.**

**மும்முனைப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**1959ஆம் ஆண்டு சென்னை, எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நடைபெற்ற கழக மாநில மாநாட்டில் தொண்டர் படைத் தளபதியாக சிறப்புற பணியாற்றியவர்.**

**1959 முதல் 1974ஆம் ஆண்டு வரை தொடர்ந்து சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும், பெரம்பூர் பகுதிக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**1977ல் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் பூங்கா நகர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### முல்லை வடிவேல்
### மே 18 (1999)



**கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து உறுப்பினர். செயற்குழு – பொதுக்குழு உறுப்பினராக இருந்தவர்.**

**தமிழக சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பு வகித்தவர். ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தின் முதல் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து பதினாறு ஆண்டுகள் அப்பொறுப்பு வகித்தவர்.**

**வேலூர் கூட்டுறவு வங்கியின் தலைவராகப் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்பு, கருப்புக் கொடி, விலைவாசி உள்ளிட்ட அறப்போராட்ங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**நெருக்கடி நிலையின்போது ஓராண்டு மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**